நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–5.

<u>சுற்றறிக்கை</u>

ந.க.எண். 59284/2001/அநு1 நாள் 5 .9.2001

பொருள்: நிர்வாகம் – நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை–5 – மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள் – நகராட்சிப் பணியாளர்களின் மாற்றம் மற்றும் நியமனம் – மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை:
1. அரசு ஆணை நிலை எண். 10, ந.நி.ம.கு.வ.துறை, நாள் 9.1.92
2. அரசு ஆணை நிலை எண். 10, பமநிசீ துறை, நாள் 7.1.94
3. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 77772/97/அநு1, நாள் 13.10.97
4. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 77772/97/அநு1, நாள் 17.4.98
5. அரசு கடிதம் எண்.40576/எஸ்/2001–1, பமநிசீ துறை நாள் 21.8.2001

---

நிர்வாக காரணங்களுக்காக, பார்வை 3 மற்றும் 4–ல் இவ்வலுவலக சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்ட ஆணைகளைத் தொடர்ந்து, நகராட்சி பணியாளர்களின் மாற்றம் மற்றும் நியமனம் சம்பந்தமாக மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களுக்கு கீழ்க் காணும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

2. இத்துடன் இணைக்கப்பட்ட பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களைத் தவிர மற்ற அனைத்து இனங்களுக்கும், அந்தந்த மண்டலங்களுக்குள்ளேயே மாற்றம் மற்றும் நியமன ஆணைகள் மண்டல இயக்குநர்கள் பிறப்பிக்கலாம்.

3. ஓர் அலகின் கீழ் வருகின்ற இரண்டு மண்டலங்கள் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் மாறுதல்களை மாறுதல் கோரும் பணியாளர் பணிபுரியும் மண்டலத்தின் இயக்குநர், மாறுதல் கோரப்பட்ட மண்டலத்தின் இயக்குநரின் ஒப்புதலோடு மாறுதல் செய்யலாம்.

4. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள், நகராட்சிப் பணியாளர்களுக்கு மாற்றம் மற்றும் நியமனம் செய்வது குறித்து பரிசீலிக்கும்போது, அரசால் மற்றும் இவ்வலுவலகத்தால் அவ்வப்போது வெளியிடப்பட்ட ஆணைகள் மற்றும் நிபந்தனைக்களுக்குட்பட்டு அம்மாற்றங்கள் இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக,

(அ) ஒரு பணியிடத்தில் ஒரு பணியாளர் மூன்று ஆண்டுகள் முடித்திருக்க வேண்டும். அவ்வாறு மாற்றும் போது மாற்றப்படும் இடம் காலியாக இருக்க வேண்டும் அல்லது அந்தப் பணியிடத்தில் பணிபுரிபவர் மாறுதல் செய்யப்படும் கால வரையரையில், (Transfer Period) மூன்று ஆண்டுகள் முடித்து மாற்றப்படுவதற்குத் தகுதியானவராக இருக்க வேண்டும்.

(ஆ) ஒரு பணியிடத்திற்கு மாறுதல் கோரி விண்ணப்பம் வரும்போது, ஏற்கேனவே பணிபுரியும் இடத்தில் குறைந்தது ஓராண்டு பணி முடித்தவராக இருத்தல் வேண்டும். அவர் கோரும் பணியிடம் மேலே பத்தி அ–ல் குறிப்பிட்டது போல் காலியாக இருக்க வேண்டும்.

(இ) புகார்களின் நிமித்தம் ஏற்கெனவே ஓரிடத்திலிருந்து மாற்றம் செய்யப்பட்ட பணியாளர் மற்றும் ஓரிடத்தில் செய்யப்பட்ட தவறுகளுக்காக குற்றப்பத்திரிக்கை ஏற்படுத்தப்பட்ட நபர்கள் மீண்டும் அதே இடத்திற்கு மாற்றம் செய்வது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

மேற்காண் நிபந்தனைகளை கருத்தில் கொள்வதோடு பார்வை–1 மற்றும் 2–ல் காணும் அரசாணைகளில் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்குட்பட்டும் மாறுதல்கள் அமைய வேண்டும்.

5. பணியாளர்கள் மீது புகார்கள் பெறப்பட்டால் அப்புகார்களின் அடிப்படையில் உடனடி மாறுதல் செய்யும்முன் புகாருக்கு உட்பட்ட நபரின் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. இச்சுற்றறிக்கையை பெற்றமைக்கான ஒப்புதலினை மறுதபாலில் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) சி. வி. சந்திர,
நகராட்சி நிர்வாக ஆணையர்.

<u>இணைப்பு:</u> பிற்சேர்க்கை

பெறுநர்:

அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்,

நகல்

நகராட்சி ஆணையர்கள்
இவ்வலுவலக அனைத்து அலுவலர்கள்
அனைத்து கண்காணிப்பாளர்கள்.

/உத்தரவுபடி/அனுப்பப்படுகிறது/

[signature]
தே. நி. கண்காணிப்பாளர்
6/9/2001.

[initials] 6-9-01

## பிற்சேர்க்கை

### I தமிழ்நாடு நகராட்சிப் பொது பணி விதிகள், 1970

| | |
|---|---|
| வகுப்பு – I | மேலாளர், சிறப்பு நிலை |
| வகுப்பு – IA | |
| பிரிவு 1 | மேலாளர், தேர்வு நிலை |
| பிரிவு 2 | வருவாய் அலுவலர், சிறப்பு நிலை |
| வகுப்பு – II | |
| பிரிவு 1 | மேலாளர், முதல் நிலை நகராட்சிகள் |
| பிரிவு 2 | கணக்காளர், சிறப்பு மற்றும் தேர்வு நிலை நகராட்சிகள் |
| பிரிவு 3 | உதவி வருவாய் அலுவலர், சிறப்பு நிலை நகராட்சிகள் |
| பிரிவு 4 | வருவாய் அலுவலர், தே. நி. நகராட்சிகள். |

### II – தமிழ் நாடு நகராட்சி பொறியியல் பணி விதிகள் , 1997

| | |
|---|---|
| பிரிவு I மற்றும் II | அரசால் வழங்கப்பட வேண்டியவை |
| பிரிவு III | உதவி செயற் பொறியாளர் |
| பிரிவு IV | உதவி பொறியாளர் |

### III தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகள், 1970

| | |
|---|---|
| வகுப்பு I<br>பிரிவு 1 | இளநிலைப் பொறியாளர் நிலை 1<br>(பொறியியல்) |

### IV தமிழ்நாடு நகராட்சி நகரமைப்புப் பணி விதிகள் 1970

| | |
|---|---|
| பிரிவு 1 | முதுநிலை நகரமைப்பு அலுவலர் |
| பிரிவு 2 | நகரமைப்பு அலுவலர் நிலை–1 |
| பிரிவு 3 | நகரமைப்பு அலுவலர் நிலை–2 |

**V தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970**

| | |
|---|---|
| பிரிவு 1 | நகர குடும்பநல அலுவலர் |
| பிரிவு 1(எ) | மருத்துவ அலுவலர் (குடும்பநலத் திட்டம் ) |
| பிரிவு 2 | மருத்துவ அலுவலர்(ஆங்கில மருத்துவம்) |
| பிரிவு 3 | மருத்துவ அலுவலர் (நாட்டு மருத்துவம்) |
| பிரிவு 4 | விலங்கியல் உதவி அறுவை சிகிச்சை அலுவலர் |

**VI தமிழ்நாடு நகராட்சிப் பொது சுகாதாரப் பணி ஒழுங்குமுறைகள் 1970**

| | |
|---|---|
| வகுப்பு I<br>பிரிவு 1 | பெண் மருத்துவ அலுவலர் |
| பிரிவு 2 | பெண் கண்காணிப்பாளர் |
| பிரிவு 3 | மருத்துவ அலுவலர்(பொது சுகாதார பரிசோதனைக் கூடம்) |
| பிரிவு 4 | மருத்துவ அலுவலர்(ஐ.டி. மருத்துவமனை) |
| வகுப்பு II<br>பிரிவு 1 | சுகாதார அலுவலர் |

**VII தமிழ்நாடு நகராட்சி பணி விதிகளில் உட்படாத பதவிகள்.**

மேற்கண்ட பணியிடங்களில் உள்ள அலுவலர்கள் மாற்றம் நகராட்சி நிர்வாக ஆணையரால் மேற்கொள்ளப்படும்.

(ஒம்.) சி.வி.சந்திரன்
நகராட்சி நிர்வாக ஆணையர்.

/உத்தரவுபடி/அனுப்பப்படுகிறது/

[signature]
தே.நி.கண்காணிப்பாளர்
6/9/2001

6.9.01